**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : STC 114/2025**

**Prosecution witness : ம.சா. 1** **Date : 14.08.2025.**

| | |
|---|---|
| **Name : சிவலிங்கம்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

1) நான் தற்போது சேலம் மாவட்டம், சேலம் மாநகராட்சி மண்டலம் மேற்கில் உணவு பாதுகாப்பு அலுவலராக வேலை செய்து வருகிறேன். கடந்த 2022ம் வருடம் நான் மேச்சேரி ஒன்றிய உணவு பாதுகாப்பு அலுவலராக கூடுதல் பொறுப்பு வகித்து வந்தேன். நான் உணவு பாதுகாப்பு அலுவலராக உள்ளது குறித்து அரசிதழில் எனது பெயர் வெளியிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு உணவு பாதுகாப்பு துறை ஆணையாளர் அவர்கள் தமிழ்நாட்டில் குட்கா, பான்மசாலா போன்ற உணவு பொருட்களை விற்பனை செய்யக்கூடாது என 23.05.2023ம் தேதியிட்ட அரசிதழில் வெளியிட்டுள்ளார்.

2) கடந்த 29.08.2023ம் தேதியன்று இரவு 11.15 மணியளவில் சேலம், மேச்சேரி சாலையில் வாகன தணிக்கையில் ஈடுபட்டிருந்த போது TN 52 T 7632 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தை வழிமறித்து ஆய்வு செய்த போது அதில் 60 மூட்டைகள் பான் மசாலா மற்றும் புகையிலை பொருட்கள் இருந்தது. வாகன ஓட்டுநரிடம் விசாரித்த போது சதீஷ்குமார், த/பெ.மணி என தெரிவித்தார். மேற்படி பொருட்களை பெங்களூரிலிருந்து கொண்டு வருவதாக தெரிவித்தார்.

3) இதன் உரிமையாளர் பற்றி கேட்ட போது தனக்கு தெரியாது என்று தெரிவித்தார். மேலே பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களை Saffron Blended Vimal

Panmasala & V−1 Tobacco என்ற உணவு பொருளை உணவு மாதிரியாக எடுக்க தீர்மானித்து படிவம் 5A கொடுக்கப்பட்டது. Saffron Blended Vimal Panmasala 1008 கிராம் & V−1 Tobacco 144 கிராம் என்ற அளவிற்கு உணவு பொருளை நான்கு சம பாகங்களாக பிரித்து சீலிட்டேன்.

4) மேற்படி உணவு பொருட்களை 1, 2, 3, 4 என நம்பரிட்டேன். உணவு பொருளின் 4ம் பகுதியை உணவு பாதுகாப்பு துறையால் NABL ஆல் அங்கீகரிக்கப்பட்ட தனியார் உணவு பகுப்பாய்விற்கு அனுப்பும் உரிமை உள்ளது என்று தெரிவித்தேன். அவர் தனக்கு விருப்பமில்லை என தெரிவித்தார். படிவம் 6 மற்றும் அரக்கு முத்திரைத்தாள் 6 பிரதிகள் தயாரித்தேன். உணவு மாதிரியுடன் படிவம் 6 மற்றும் அரக்கு முத்திரைத்தாள் வைத்து கிண்டி சென்னை உணவு பகுப்பாய்வு கூடத்திற்கு அனுப்பினேன். கடந்த 30.08.2023ம் தேதியன்று உணவு மாதிரி எடுத்த விவரத்தையும், உணவு மாதிரி 2, 3, 4 பகுதியை நியமண அலுவலரிடம் கொடுத்து ஒப்புகை பெற்றுள்ளேன்.

5) 01.09.2023ம் தேதியன்று 2ம் எதிரிக்கு உணவு மாதிரி எடுத்த விவரத்தையும், உரிமையாளரிடம் கேட்ட கடிதத்தையும் சமர்ப்பித்தேன். 01.09.2023ம் தேதி பெறப்பட்ட உணவு மாதிரியானது தரம் குறைவானது, பாதுகாப்பற்றது மற்றும் விற்பனைக்கு தடை செய்யப்பட்டது என அறிக்கை பெறப்பட்டது. 22.09.2023ம் தேதி நியமண அலுவலர் மேற்படி உணவு பாதுகாப்பு அறிக்கையின் முடிவு குறித்து 26.09.2023ம் தேதியன்று பதிவு அஞ்சலில் அனுப்பப்பட்டது.

6) மேற்படி எதிரிகளிடம் Saffron Blended Vimal Panmasala 1008 கிராம் & V−1 Tobacco என்ற உணவு பொருள் எங்கிருந்து வாங்கப்பட்டது, யாருக்கு சொந்தமானது என விசாரித்த போது அவர்களுக்கு தெரியாது எனவும் பில் எதுவும் இல்லை என தெரிவித்தனர். எனவே உணவு பாதுகாப்பு சட்டம் மற்றும் விதிகளின் கீழ் மேற்குறிப்பிட்டவர்கள் குற்றவாளி ஆவார்கள்.

7) கடந்த 23.10.2024ம் தேதியிட்ட சென்னை உணவு பாதுகாப்பு ஆணையாளர் அவர்களின் அனுமதி பெற்று இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி குற்றவாளிகள் மீது உணவு பாதுகாப்பு மற்றும் தரங்கல் சட்டம் 2006 பிரிவு 51, 58

மற்றும் 59 (iii) ன் கீழ் தண்டனை வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன். நான் உணவு பாதுகாப்பு அலுவலர் என்ற முறையில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1) எனது பெயர் அரசிதழில் வெளியிடப்பட்ட ஆவணம் **ம.சா.ஆ.1** ஆகும்.

2) உணவு பாதுகாப்பு ஆணையாளர் அவர்களின் தமிழ்நாடு அரசிதழ் எண்.188ன் படி குட்கா, பான்மசாலா தடைசெய்யப்பட்ட ஆணை **ம.சா.ஆ.2** ஆகும்.

3) படிவம் 2 **ம.சா.ஆ.3** ஆகும்.

4) படிவம் V A **ம.சா.ஆ.4** ஆகும்.

5) முதலாம் குற்றம் சாட்டப்பட்ட நபர் NABL வாய்ப்பை மறுத்த கடிதம் **ம.சா.ஆ.5** ஆகும்.

6) படிவம் VI **ம.சா.ஆ.6** ஆகும்.

7) அரக்கு முத்திரை தாள் **ம.சா.ஆ.7** ஆகும்.

8) உணவு மாதிரி சென்னை உணவு பகுப்பாய்வு கூடத்திற்கு அனுப்பப்பட்டதற்கான கொரியர் ரசீது **ம.சா.ஆ.8** ஆகும்.

9) படிவம் VI மற்றும் அரக்கு முத்திரைத்தாள் தனியாக சென்னை உணவு பகுப்பாய்விற்கு அனுப்பப்பட்டதற்கான கொரியர் ரசீது **ம.சா.ஆ.9** ஆகும்.

10) உணவு மாதிரி எடுத்த விவரத்தை நியமண அலுவலர் அவர்களுக்கு தகவல் தெரிவித்த கடிதம் **ம.சா.ஆ.10** ஆகும்.

11) 2, 3, 4ஆம் பகுதிகளை நியமண அலுவலர் ஒப்புகை செய்து பெற்றுக் கொண்ட கடிதம் ம.**சா.ஆ.11** ஆகும்.

12) 2ம் குற்றம்சாட்டப்பட்டவர் நேரில் சமர்பித்த கடிதம் **ம.சா.ஆ.12** ஆகும்.

13) உணவு பகுப்பாய்வறிக்கை காலதாமத கடிதம் **ம.சா.ஆ.13** ஆகும்.

14) உணவு பகுப்பாய்வு அறிக்கை **ம.சா.ஆ.14** ஆகும்.

15) உணவு பகுப்பாய்வு அறிக்கை குறித்த நியமண அலுவலரின் கடிதம் **ம.சா.ஆ.15** ஆகும்.

16) மேற்படி கடிதம் முதலாம் குற்றம்சாட்டப்பட்டவருக்கு அனுப்பப்பட்ட பதிவு அஞ்சல் ரசீது **ம.சா.ஆ.16** ஆகும்.

17) மேற்படி கடிதம் இரண்டாம் குற்றம்சாட்டப்பட்டவருக்கு அனுப்பப்பட்ட பதிவு அஞ்சல் ரசீது **ம.சா.ஆ.17** ஆகும்.

18) தமிழ்நாடு உணவு பாதுகாப்பு ஆணையர் அவர்களின் வழக்கு தொடர அனுமதி கொடுத்த கடிதம் **ம.சா.ஆ.18** ஆகும்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–** குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.